**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 272** **நாள் : 06.07.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில்**

**இதுவரை 1,26,781 செல்லப்பிராணிகளின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**இதுவரை 64,586 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

தெருநாய்கள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு (நாய்கள் மற்றும் பூனைகள்) மைக்ரோசிப் செலுத்துதல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த மேலாண்மைக்காக மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை பெருநகர சென்னை மாநகராட்சியில் 03.10.2025 அன்று முதல் செயல்பட்டு வருகிறது. இந்த இணையதள சேவையானது, செல்லப் பிராணிகள் மற்றும் தெருநாய்களின் தடுப்பூசி விவரங்கள் மற்றும் மீண்டும் அடுத்த தவணை தடுப்பூசி செலுத்த வேண்டிய தேதிகளை திறம்பட கண்காணிக்க உதவுகிறது.

செல்லப்பிராணிகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடிநோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும், இந்த தடுப்பூசி செலுத்தப்பட்ட நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு மட்டும் உரிமம் செல்லத்தக்கது என்பதை உறுதிப்படுத்தி மீண்டும் உரிமம் புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்யவும், செல்லப்பிராணிகள் கைவிடப்படுவதை (Pet Abandonment) தடுப்பதற்காகவும் செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோ சிப் செலுத்தி உரிமம் பெறுவது பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த மைக்ரோ சிப்பில் செல்லப்பிராணிகளின் உரிமையாளரின் பெயர், முகவரி உள்ளிட்ட தரவுகள் பதிவு செய்யப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இதுவரை 1,26,781 செல்லப்பிராணிகள் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 1,15,119 செல்லப் பிராணிகளுக்கான உரிமங்களில் 64,586 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. 74,740 செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோசிப் பொருத்தப்பட்டு, 78,328 செல்லப்பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கீழ்க்காணும் செல்லப்பிராணிகள் மருத்துவமனைகளில் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்துதல் மற்றும் அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | செல்லப்பிராணிகள் மருத்துவமனைகள் | மண்டலம் | வார்டு | முகவரி |
|---|---|---|---|---|
| 1. | திரு.வி.க. நகர் செல்லப்பிராணிகள் மருத்துவமனை | திரு.வி.க.நகர் | 67 | எண். 1, 14 வது தெரு, டி. வி. கே குடியிருப்பு, சென்னை |
| 2. | புளியந்தோப்பு செல்லப்பிராணிகள் மருத்துவமனை | திரு.வி.க.நகர் | 77 | கே. பி. பார்க், மாநகராட்சி பூங்கா அருகில், சென்னை -12. |
| 3. | லாயிட்ஸ் காலனி செல்லப்பிராணிகள் மருத்துவமனை | தேனாம்பேட்டை | 120 | லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, அர்பன் ஸ்மித் சர்வீஸ், சென்னை -14 |
| 4. | நுங்கம்பாக்கம் செல்லப்பிராணிகள் மருத்துவமனை | தேனாம்பேட்டை | 110 | பள்ளிச் சாலை, சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் , சென்னை -36. |
| 5. | கண்ணம்மாப்பேட்டை செல்லப்பிராணிகள் மருத்துவமனை | கோடம்பாக்கம் | 141 | முத்தரங்கன் சாலை, தி. நகர், கண்ணம்மாபேட்டை இடுகாடு மையம் அருகில், சென்னை -17. |
| 6. | மீனம்பாக்கம் செல்லப்பிராணிகள் மருத்துவமனை | ஆலந்தூர் | 166 | எண்.53/28, பி நேரு, நெடுஞ்சாலை. பி. வி. நகர், நங்கநல்லூர், சென்னை – 61, |

ஆகவே, செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் இந்த இலவச சேவையை பயன்படுத்தி தங்களின் வளர்ப்பு நாய்கள் மற்றும் பூனைகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்தி உரிமம் பெறுவதற்கு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**